
ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமத் ராமாயண காவடிச்சிந்தென வழங்கும்

இராமாயணத்
திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.



இவை, ஜெயங்கொண்ட சோழபுரம்

வா. கிருஷ்ணசாமிகோனாரால் இயற்றியது.

பெ- ஆறுமுக முதலியாரால்

சென்னை, முரஹரி அச்சுயந்திர சாலையிற்

பிரசுரிக்கப் பட்டது.

இதன் விலை] [அணா 2

ரிஜிஸ்டர்ட் காபிரைட்

ஸ்ரீராமஜெயம்.

நூதன புத்தகங்கள்.

ஜெயங்கொண்ட சோழபுரம், வா. கிருஷ்ணசாமிகோனார் இயற்றிய			
ஸ்ரீமகாபாரதம். ஆதிபர்வம், சபாபர்வம் அடங்கிய முதற்பாகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு. 40-சயிட்டுள்ளது	0	4	0
ஸ்ரீமத் ராமாயணம் பாதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 40-சயிட்டுள்ள புஸ்தகம்	0	4	0
ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹரணம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
கற்குலசேகரி என்னும் நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் அதிலுள்ளபாடல்களை உபயோகிக்குமாறு பலவர்ணமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம்	0	2	0
ஷை நல்லதங்காள் சரித்திரம் இரண்டாம்பாகம்	0	2	0
அல்லி அர்ஜுனா திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு, இவை டிராமாகம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பலவர்ணமெட்டுகளுடன்கூடியது முதற்பாகம்	0	2	0
மேற்படி அல்லி அர்ஜுனா இரண்டாம்பாகம்	0	2	0
கோவிலன்சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்ணமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம்	0	2	0
மேற்படி இரண்டாம்பாகம்	0	2	0
வல்லாள மகாராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
திருசிரபுரம், கோவிந்ததாஸ் அவர்களியற்றிய			
ஸ்ரீராமாயண பக்திரஸக் கீர்த்தனங்கள் நூதன இந்துஸ்தான், பாரீஸ், தில்லானா, டோமரி அடங்கியது	0	5	0
கும்பகோணம் புஸ்தகஷாப்பு கே. வீ. கதிர்வேல்பிள்ளை இயற்றிய			
தேசிங்குராஜன்கதை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
நந்தனார் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
சாவித்திரி-சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-ம் பாகம்	0	2	0
மேற்படி சாவித்திரி-சத்தியவான் 2-ம் பாகம்	0	2	0
மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
காமதகன திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
இட்டிலிக்கும் உப்புமாவுக்கும் சண்டை	0	2	0
ராம நாம பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு இதிலுள்ள கீர்த்தனைகள் வெகு குதூகல முண்டாகும்	0	3	0
மாம்பழக்கும்மி	0	1	0
பிரகலாத சரித்திர டிராமா	0	5	0
ஸ்ரீசௌளிராஜப் பெருமான்பேரில் பக்திரஸ் அருள்வாக்கு	0	4	0
ஸ்ரீகண்ணபிரான் பஜனைகீர்த்தனை	0	2	0

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் ராமாயண காவடிச்சிந்தென வழங்கும்

இராமாயண

திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இஃது,

திருச்சிறாப்பள்ளி ஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரம்

ம-௱-௱-ஸ்ரீ,

வாசுதேவக்கோனார் அவர்கள் குமாரர்

கிருஷ்ணசாமிகோனாரால்

இயற்றப்பட்டு,

கும்பகோணம் புஸ்தகக்ஷாப்

காயண விகடகேசரி யென்னும்

கே. வீ. கதிர்வேல்பிள்ளை அவர்களால்

பரிசோதித்து,

கும்பகோணம்-புஸ்தகவியாபாரம்

ஆர். கோவிந்தசாமி நாயுடு விருப்பத்தின்படி

பெ. ஆறுமுக முதலியாரால்,

சென்னை,

முரஹரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

12-ம் பதிப்பு

ரிஜிஸ்டர் காபி ரைட்.

இதன் விலை) 1922. (அணா 2

ROJA MUTHIAH
ARTIST:
KOTTAIYUR P.O
RAMNAD DISTRICT.
MADRAS STATE.

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல மானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்,— ஸ்ரீமத் இராமாயணத் திருப்புகழ்ச் சிந்து என்னும் புஸ்தகத்தை வெண் தமிழ் நடையாக திருச்சினப்பள்ளி ஜில்லா ஜெயங்கொண்ட சோழ புரம் ம-ா-ா-ஸ்ரீ, வாசுதேவக்கோனார் அவர்கள் குமாரர் கிருஷ்ணசாமி கோனாரால் எழுதினதை பெ. ஆறுமுக முதலியாராகிய எனக்கு சகலசுத ந்திரம் கொடுத்துவிட்டபடியால, இதை என் அனுமதியில்லாமல் இதர மானவர்கள் எவ்விதத்தி லாகிலும் அச்சிட லாகாதென கனம்பொருந் திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட் டிருக்கிறது.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

உ

சிவமயம்.

விளம்பரம்.

வித்தியாப் பியாசிகளுக்கு தேரிவிப்பது யாதேனில்:—

எமது புத்தகசாலேயில் அனேகவித சரித்திரங்கள், திருப்புகழ், காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையானவர்கள் அடியிற்கண்டவிலாசதாரருக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள வேண்டிய புத்தகங்களின் விலேக் குத்தகுந்த போஷ்டு பிள்ளேகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பினால் உடனே நீர்கோரிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பிள்ளேகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜி 1-புத்தகத்திற்கு 5-அணா வாகும். அதனால் மேற்சொன்னபடி தபால்பிள்ளேகள் அனுப்பினால் நாங்கள் கட்பெட் போஷ்டாக அனுப் புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா குடுத்து வாங்கிக்கொள்ள வும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாகசேரும்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

நெ. 4, 2-வது சந்து, பெருமாள்கோயில்தோட்டம், மதராஸ்.

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

முகவுரை.

சகலமான பக்த சிரோன்மணிகளுக்கும், கல்விமான்களுக்கும், தெரிவிப்பதாவது:—வித்வவிவேக கல்விக்களஞ்சிய கந்தனருள் பூர்த்தியடைந்த ம-ள-ள ஸ்ரீ, சீமான் சென்னிகுளம்-அண்ணாமலை ரெட்டியார் அவர்கள் கழுகுமலை-சுப்பிரமணியர் மீதில் பாடிய காவடிச்சிந்தின் சந்தங்கொண்டும், திருவண்ணாமலையில் எழுந்தருளிய வரப்பிரசாத அருணகிரிநாதர் மால்மருகன் முருகன்மீது பாடிய திருப்புகழின் சந்தங்களைக்கொண்டும் ஸ்ரீமத் வைகுண்டநாதனையும், உலகரட்சகனையும் விளங்காநின்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அம்ஸத்தி லொன்றை திருகைலாயத்தில் பார்வதிதேவிக்குப் பரமேஸ்வரன் உபதேசித்த தாரகப் பொருளான ராமநாம மந்திரத்தை வாய்ந்த ராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்தென ஷை சந்தங்களுக்குக் குறையாமல் அறியாத சிறுவனாகிய யான் இயன்றவரையில் எழுதியிருக்கிறேன்.

இங்ஙனம்,

ஜே. வா. கி.

குறள்.

குழலினிது யாழினிது யென்பர்தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்
எப்பொருள்யார் யார்வாய் கேட்பினு
மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

ROJA MUTHIAH
ARTIST:
KOTTAIYUR P. O.
RAMNAD DISTRICT.
MADRAS STATE.

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்ராமாயணத் திருப்புகழ் இமிடேஷன் பதிப்பு.

புத்தக அறிக்கை.

திருச்சிறுப்பள்ளிஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமிக்கோனார் அவர்களா லியற்றிய இராமாயணத் திருப்புகழ்ச் சிந்து காவடிச்சிந்து வர்ணமெட்டுகளென்னும் எமது அபூர்வ புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—

நண்பர்காள் மேற்கூறிய இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து என்னும் புத்தகத்தை மேற்படி கிருஷ்ணசாமிக்கோனார் அவர்களால் இயற்றப்பட்டு, பெ ஆறுமுகமுதலியாராகிய என்னால் சுமார் பதினொரு பதிப்புகள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு, உலகமெங்கும் பிரசித்தியடைந்து யாவராலும் புகழ்பெற்றுவருவதும், இதற்கென கிடைக்கப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்களின் பெருமையும் யாவருக்குந் தெரிந்த விஷயமே, ஆகையால் எமது வியாபாரத்தின் பெருமையாலும், மேற்படி கோனார் அவர்களின் கவியை பங்கப்படுத்தவும் துர் எண்ணங்கொண்ட சிலர் புதிதாக ஸ்ரீமத்ராமாயணத் திருப்புகழ் என "இமிடேஷன்" புத்தகத்தை அச்சிட்டு எமது வியாபாரத்தைக் கெடுக்க உத்தேசித்து அசுத்தமான பதிப்பாக அச்சிட்டு விற்றுவருகிறார்கள். ஆகையால் ஷை ராமாயணத் திருப்புகழ் புத்தகத்தை வாங்க விருப்பமுள்ள நண்பர்கள் மேற்படி புத்தகத்தின் டைட்டல் பேஜியின்மேல் ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமிக்கோனார் இயற்றியதுதானெவென பார்த்து வாங்குவீரென நம்புகிறேன்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்,

நெ. 4, பெருமாள்கோயில் தோட்டம், 2-வது சந்து, சென்னை.

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் இராமாயண திருப்புகழ்ச்சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

விநாயகர் துதி.

வெண்பா.

சந்திரஞ்சேர் பானுகுல துய்யன் ரெகுபதிமேல்
செந்தமிழால் கீர்த்தனங்கள் செப்புதற்கு—சந்ததமும்
சங்கரனா ரீன்றசுதன் தந்திமுக னைவரு
ளைங்கரனா ரின்று துணை.

அனுமார் துதி-வெண்பா.

தென்னிலங்கை ராவணன்றன் சென்னிபத்துங் கொய்தரெகு
மன்னவனின் தூதனு மாருதியே—நன்னயஞ்சேர்
அஞ்சனையாள் புத்திரனே அற்புதமே கற்பகமே
வஞ்சமின்றி நீ துணையாய் வா.

விநாயகர் கீர்த்தனம்.

திருமால் மருகனே என்ற வர்ன மெட்டு.

கண்ணிகள்.

1 சிவனார்மகிழ் மகனேதிக ழொளியே கஜமுகனே அந்த
சேவற்கொடி யோனையீன்ற பூவைக்கிட பாகந்தந்த

2 தவயோகிகள் குருவேயொளிர் தருவேதத்தினுருவே உன்
தாளிணைப் பணிந்தேன்பதத் தாளினையெனக் கருள்செய் சிவ

4 மனமுமிறங் கலையாமகிழ் தெய்வயாளவுந் தொலையா எழில்
மங்கையர் வல்லவைமகிழ் சிங்கார சுந்தரதீரா சிவ

4 அனுதினமுந் துதிசெய்தேன் அன்புடனுன்பத முய்தேன் புகழ்
அய்யனே மெய்யனேகுண துய்யனே கிருஷ்ணனைக்காரும் சிவ

Digitized by Roja Muthiah Research Library

அநுமார்பேரில் கீர்த்தனம்.

இன்னமுமேனேடி மோடி என்ற என்றமெட்டு.

1 அம்புவிபோற்றுங் கனவானே
அரிராகவதூத னனுமானே
நம்பிக்கையாயோர்ந்து ராமனுடன்சேர்ந்து
உம்பரிடுக்கத்தை அன்பாய்தவிர்தோனே அம்

2 வம்பனிராவணன்மாள வுயிர்
வஞ்சிஜானகி சிறைமீள
நம்பியசுக்ரீபன் நன்மகுடஞ்சூட
நானிலந்தன்னிலுதித்தாயே கொண்டாட அம்

3 பார அசோகவனந்தானே முற்றும்
பதறக்கதற முறித்தோனே
கோர அரக்கரை கூட்டியெமலோகம்
சேரும்படிசெய்த சிங்காரதீரனே அம்

4 ஆரவாரத்துடனுற்றாய் அழி
யாதசிரஞ்சீவி பெற்றாய்
தாரணியிற்றமிழ் சோரமிலாதருள்
தாசர்கள்தாசனும் தாசன்கிருஷ்ணசாமி அம்

மகாவிஷ்ணு ஸ்துதி.

திருவுற்றிலகுகங்கை என்ற வர்னமெட்டு.

1 புகழ்வுற் றிலகுகங்கை மகிமையைத் துலங்குசிங்க
புனிதன் தலைவணைதத்த நாரணன் எழில்
ஜனகிக்கிசைந்தபரி பூரணன் வுயர்
பூசுரர்ப்பணி யாதவக்குல மாசிலாமணி யானதற்பர
புகலற்கரிய பரந்தாமனே வினை
அகலக்கனிமிகுந்த நாமனே

2 குசனுக் கினியநேச சுகுணக் குணவிலாச
குமரக் குகனுக்கொரு மாமனே புகழ்
அமரர்க் கருளவந்த பூமனே அன்று
குஞ்சரங்கதி நீயெனத்ததி கூவிட்டப்பதி மேவியப்பெரு
குறையைத் தவிர்த்தந்த பாலனே அரு
மறைகட் டெறியவந்த சீலனே

Digitized by Roja Muthiah Research Library

3 கருணைப் பெறநினைந்த அருவன் தனக்குகந்த
கருணைக் கடலெனுங்கார் வண்ணனே மேரு
கிரியைக் குடைபிடிக்கும் கண்ணனே அன்று
காவில்மாடுகளோடுகூடவே மேவிசென்றிடு தேவனாகிய
கமரக் கரமிலங்கும் தூயனே அரை
நிமையிற் புவிகலங்கு மாயனே

4 அருமைப் புலவர்சித்த மனதிற் களிமிகுத்த
அறிவிற் பரவுமுத்தி நாதனே அதி
விரைவிற் றுகிலளித்த பாதனே எழில்
ஆயர்மாமனை மீதிலேவளர் கோதையர்க்கொரு சேயனாகிய
அருமைமிகுந்த கிருஷ்ணசாமியே தமிழ்
பெருமை யுணர்ந்தநல்ல நேமியே

ஸ்ரீ வெங்கடாஜலபதி பேரில்

திருப்புகழ் சந்தம்.

1 திரிநாறுநாட்கள் கருவோடிருந்து உருவாய்த் திரண்டு
புவிமீதே
திகழாய்ப்பிறந்து கலையேதெரிந்து சிலவேட் கணைக்கு
ளுரவாகி

2 அறிவே தவழ்ந்து மயலேமிகுந்து அதிலே கிடந்து
உழலாமல்
உன்னருளால்சிறந்து மனமேதிருந்த வருவாய் பறந்து
சுகமேரி

3 சருவேயுதிர்ந்த மரம்போலிருந்து சதியா னிரண்யன்
மகனாரும்
ததியாளவென்று முறையாடஸ்தம்பம் தனிலேகி கிர்பை
புரிந்தோனே

4 அறவே மிகுந்த உருவாயமைந்த பரிவான சப்த
கிரிமேவும்
அலர்மேலுமங்கை மணவாளனை வடவேங்கடேச
பெருமாளே.

Digitized by Roja Muthiah Research Library

பெருமாள் சந்நிதியில் தேவர்கள் முறைப்பாடு.

பொன்னுலவு சென்னிகுள என்ற வர்ணமெட்டு.

1 ரஞ்சிதஞ்சேர் வஞ்சிதிரு கொஞ்சிடுங் குணாளனை
நாரணா கருணைவைத்துப் பாரய்யா பரி
பூரணா வுயிர்கொடுத்துக் காரய்யா வெகு
நாசமுற்றிடு பாவிராக்ஷதர் மோசமிப்படி யாய்நடந்திட
நாங்களினி யெந்தவித முய்குவோம் இம்சை
தாங்கவிலையே ஹரியென் செய்குவோம்

பெருமாள் தேவர்களுக்கிரங்கி அருள்கூறல்.

ஷை வர்ணமெட்டு.

1 தஞ்சமென வந்தவர்காள் அஞ்சவேண்டா முங்களுக்கு
சஞ்சலந் தருந்துபரை யோட்டுவேன் அரக்கர்
துஞ்சவேகை வாளியினல் மாட்டுவேன் இந்த
தாரணியிற்புகழ் பெருமை தங்கிய தசரதர்க்கொரு சுதனெனச்சு
ஜென்மமு மெடுக்கிறே னின்னேரமே உங்கள்
துன்பமு மகற்றுவே னன்னேரமே

பால காண்டம்.

விஸ்வாமித்திர மகாரிஷி தன்னுடைய வேள்வி முடிவதற்காக தசரதரிடம்வந்து ஸ்ரீராமரைத் தாவென்றுகேட்பது.

ஆறுமுகவடி வேலவனே என்ற வர்ணமெட்டு.

1 நாடோர் புகழ்பெருங் கீர்த்தியே ராஜகுணநிதியே-உனை
நம்பிவந்தேனெனக் கின்பமாய்த் தந்தருள் ராமனை யித்ததியே

2 தாடகைப்பாவி தவிர்க்குவாள் வேள்வியை தாமசம் செப்பாதே
இந்த-தாரணியிற்பெருங் கீர்த்திகளூற்றிடும் தந்திடி விப்போதே

Digitized by Roja Muthiah Research Library

3 உம்பர் விசாரமொழிக்க அன்னேரமே சம்பரனைக்கொன்றனே
அந்த அன்புதழைக்கவே ராமனைத்தந்தால்கேகம்பெருவாயே

4 கோபத்தில் ருத்திரனானே விஸ்வாமித்திரன் கோரிவந்தே
னனையே-இந்த
ஆபத்தைக்காக்கவேவேணும் விரைவிலனுப்புவாய் நீயெனையே

தசாதர் ஷை ரிஷியிடம் ராமன் சிறுகுழந்தை யாதலால் நான்வந்து வேள்வியை முடிக்கிறேனென பதிலுரைத்தல்.

கண்ணாயிரம்படைத்த என்ற வர்ன மெட்டு.

1 ஆபத்தெனவேவந்த கோபத்தினில் மிகுந்த
அவனிகலங்கிடுங் கவுசிகமாமுனி அய்யனே-அரை
நொடிதனிற் குடகை மடியசெய்யுறுக்குறேன் மெய்யனே

2 பாபச்செயலறியான கோபமேதங்குறியான் அப்
பாவியையெவ்வித மாவிகிடுத்திடச் செய்குவான்-மலைப்
பால்மணமாறியே கணையேதென யெய்குவான்

3 சரியல்லவேநீசொன்ன முறையதனையாமென்னை
சஞ்சலமாகித் தவிர்க்குதே யென்னுடல் ஆவியே-என்
தனையனைப்பிரிந்திடில் நீங்குமேயென்னுயிர் மேவியே

வசிஷ்டர் தசதராரிடம் ஸ்ரீராமனைக் கவுசிகர் பின்னால் அனுப்பினால் மோசம் வராதென நன்மொழி கூறல்.

ஷை வர்னமெட்டு.

1 மோசம்வராது சொன்னேன் கோசிகனாரின் பின்னே
முகமலர்வொடு ரெகுபதியெனு மகிபனைக்கூட்டுவாய்-அம்
முனிவனலருள் மிகுமகுடமுஞ் சடுதியிற் சூட்டுவாய்

Digitized by Roja Muthiah Research Library

தேவர்கள் முறைப்பாடு.

ஜோர் ஜோர் என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

பல்லவி.

க்ஷீராப்தி சயனனை தேவனே காரும்

அநுபல்லவி.

தேவனை தேவனேநீ திருவருள்புரி கருணையுடனே க்ஷீ

சரணம்.

3 கோர அரக்கர் செய்யுங்கொடுமை
குறைகளனைத்தும் முறையிட்டோமே க்ஷீ

4 அடைக்கலமென் றோடிவந்தோம்
அபயமபயம் ஆதரிப்பாய் க்ஷீ

அயோத்தியா காண்டம்.

இலக்ஷ்மணன், ஸ்ரீராமருக்கு தானே மகுடங்கொடுக்கிறேன் என்று கோபத்துடன் கூறல்.

வெள்ளிமலையொத்த பலமேடை என்ற என்றமெட்டு.

1 நான் தருவேன் ராமனுக்கு மகுடம் என்ன
ஞாயமோ பரதனுக்குக் கிரீடம் நிலை
நாட்டினோரைக் காட்டிடிலோ வாட்டியெம லோக
மனுப்பிடுவேன் வதைத்திடுவேன்

2 சேனைபேர்போர்வீர ரென்னைக்கூடி ஜெயம்
பெற்றிடவே வந்தாலுமே நாடி என்றன்
சித்திரக் கணையால்வென்று அத்தனைபேரையும்
கொன்று தீர்வேன் மனதார்வேன்

3 குருடனை ராஜமுழி முழிக்கச் செய்யும்
கொள்கைபோலவே வுலகம் செழிக்கப்பட்டம்
கொள்ளுமோ பரதனுக்கு வெல்லுமோ ரவிமுன்
பனி நின்றே இதுமொன்றே

Digitized by Roja Muthiah Research Library

4 தாரதம்மியமறியாக் கோனே பெற்ற
தயரதனுக்கிடந்து தானே பூவில்
தத்தளித்தகமுருகி பித்தனைப்போ லலைந்திட
கானே செய்குவேனே

இலக்ஷுமணன் கோபத்தை ஸ்ரீராமர் ஆற்றிதல்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்னமெட்டு.

1 தம்பியுனக்கித்தனைகோபம் வந்ததுயேனே சொந்திட்தானே
தாங்கவொண்ணாத மனஸ்தாபம் எங்கும்
தந்தைசொலைவிட மந்திரமிலையென
முந்தியோர்களுகந்தபழமொழி
தாரணியிற்கேட்டதில்லையா தகப்பன்பேரைவிளங்கும்சீரே
தன்மையா மிதிலென் சொல்லையா

2 இன்பமாய்ப் பயின்றவள்தானே நமைவிரும்பா மனமிரும்பா
இதனைநீ யறிந்திடா தேனே அடா
இனிமேலுனைக்கண்டபேர்கள் பழிக்கவோ
வினையமிதுவென சடலமொழிக்கவோ
இக்கருமை தந்தைவாக்கியம் சத்தியமென்றே மெத்தவுங்கொ
யேகுவதல்லோ சிலாக்கியம் (ண்டே

ஆரணிய காண்டம்.

ஸ்ரீராமரைக்கண்டு புகழ்தல்.

திருப்புகழ்.

இசைந்த ஏறும் என்ற வர்னமெட்டு.

1 விரிந்தமார்பும் மரவுரிபோர்வையும் வெகுநேரு அதில்
விளங்குநூலும் தகதகவென ஒலித்திடுசீரு

2 துறந்தசீலம் தவசிகட்கேபெருந் துணையாச்சே நாம்
துலைக்கலாமினி யரக்கர்பயமதை துயர்போச்சே

3 இருண்டமேகம் ஸியாமளவர்ணம் இவர் தேகம் அருள்
இலங்குபாதம் அகலிகைபேறுற அதியோகம்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

Digitized by Roja Muthiah Research Library

4 பொருந்துசிலன் பரதனுக்காய்சுடர் முடிவேண்டி மொழி
புகன்றகைகயை கவலையை மாற்றியே பெருமாளே

தபசிகள் ஸ்ரீராமரிடம் அரக்கரால் படுந்துன்பத்தை முறையிடல்.

பூமிமேச்சிமேம் என்றமெட்டு.

1 ரஞ்சிதலக்ஷ்மணன் வஞ்சியர் ஜானகி கூடவே
வந்தாய்கூடவே வினை யோடவே உனை
நம்பினோங்கள்செய்த பின்பமானதவம் நீடவேதுதி கூடவே
2 பஞ்சபாதக வஞ்சகம் செய்துஷ்ட பாவிகள்
பொல்லாக்கோபிகள் படு லோபிகள் அவர்
பண்ணும்இம்சைகளை யெண்ணிவின்னந்துய ராகுதே
அகம் வேகுதே
3 பூமிபாரந்தவிர்க்க நேமமுடனுதித்த பூமனே
நல்லகோமனே வுயர் காமனே வெகு
புண்யமுண்டுனக்கு கெண்யம்வைத்தருள் ராமனே
பரந்தாமனே
4 காமனைப்பயின்ற ஸ்ரீமந்நாராயணக் கர்த்தனே
பரிசுத்தனே அருள் முத்தனே இந்தக்
காலமெங்கட்கனு கூலஞ்செய்யக்கிர்பை கண்ணனே
தாரும் வண்ணனே

ஸ்ரீராமர் தண்டகவனரிஷிகளுக்கு அபயமீதல்.

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு என்றமெட்டு.

1 அஞ்சவேண்டாமுங்கள் சஞ்சலந்தவிர்ப்பேன்
ஆசிர்வாதந் துணையே அரக்கர்க்
குண்டெங்கையிற் கணையே வினை
அகற்றுவே ஞானியே கன
ஆவலோடிருந்து மேமகம் புரிந்து
ஆறுவீர்கள் முனியே
2 பஞ்சபோலடித்து நஞ்சவே மடித்து
பாகுபோ லுருக்குறேன் அடி
வேர்களை நறுக்குறேன் அம்புக்
இரையெனப் பொறுக்குறேன் சற்றும்

Digitized by Roja Muthiah Research Library

பதரிடாதிருங்கள் கதரிடர்திருங்கள்
பங்கிலேயிருக்   கின்றேன்

3 மூதண்டமுற்றினும் கோதண்டத்தால்
பழிமூட்டுவேனே   படியில்   பலங்
காட்டுவேனே   கொடியில்   எடுத்
தாட்டுவேனே   பிடியில்
மூதாதையான பெரியோர்கள்போல்
முயலுவேனே   வுங்களடியில்

சூர்ப்பனகை ஸ்ரீராமரைக்கண்டு மோஹித்தல்.

செந்தின்மாநகரந்தன்னில் என்ற வர்னமெட்டு.

1 இந்தமாமன்ன   னோடு யெங்காளுமே
விந்தையதாய்க்   கூடிநானே சுகம்
தந்திடவே   செய்குவேனே இவனீ
இகபரசுகமதனைத்   தந்திடு மகமகிழ்
குணயீசனென்றிட
எந்தலோகத்துச்   சுந்திராஜனோ
இந்திரனோ சங்   திரன் தானோ
எனக்கென்றே அயன்   படைத்தானே

2 கந்தமாமலர் வாசம்   பொருந்திய
கற்பகவியாமள   தேகன் எழில்
அற்புதனென நற்   றாயன் இவன்
காவிலனுதினம் சிலமுடன்பணிக்   தாலுமெனக்
கொருகாலு   துயரிலே
கண்டவுடனென்   அங்கமும்வாடுதே
காதலி யானினி   வேறொரு
காதனும் வேண்டிடேன்   பாரில்

3 மாரவேள்திரனுனு   மிவனின்
மார்புக்கிணையாகு   வானோ வுயிர்
நேர்மைக்கிசைந்தவள்   நானேசீர்
மந்தகாஸமிருந்த   ரத்தின தந்திர
னிவனோடு   யித்தினம்
மங்கையான் சொந்தநாயகி   யாகினேன்

Digitized by Roja Muthiah Research Library

மனக்குறையாவையும் விண்டேன் என்றழி
கனத்துயரையின்று கண்டேன்

4 வீரமேமிகுந் தீரசிகாமணி
வேலேசூழும்புவி மேலே ஒரு
சீலனுங்காணேன் கண்ணாலே இந்த
வேந்தனின்பெரு சாந்தநற்குணம்
மாந்தர்கட்கேயமைந்த பொற்பணம்
வேல்விழியானும் யாரினிலாரையும்
வேண்டிமனதினி லெண்ணேன் இவனை
தீண்டாவிடிலழு துண்ணேன்

மறுபடியும் சூர்ப்பனகி மோஹமுறல்.

அம்மாமதுரை மீனாக்ஷி என்ற வர்னமெட்டு.

1 அந்தமானகுண தீரன் என்
அறிவுக்கேற்ற மாரன் சிங்கார
அனங்கன்பணி வுதாரன்
அழகினிலொய் யாரன் அந்த

2 சந்ததமுநான் கூடி சீர்
சையோகத்தைநாடிக் கொண்டாலே
சாயுஜ்யமுற்றுங் கோடி
தவரிடாது மோடி அந்த

3 மைந்தன் கிருஷ்ணன் தமிழ்பாடி வுயர்
மன்னவுன்னைத் தேடி வந்தேனே
மங்கையானு மோடி
மருவவென்ன மோடி அந்த

சூர்ப்பனகி ராவணனிடம் ஸ்ரீராமர் முதலானவர்க ளுடைய வரலாறுகளைக்கூறி சீதை யுனக்கே தகுந்தவளெனச் சொல்வது.

திருப்புகழ் வங்கரா மார்பிலணி என்ற வர்னமெட்டு.

1- சிங்காரமார்பினொடு தேஜசுகிறைந்தவெழில்
சந்தோஷமாகவிரு பேர்களொருதையலுடன்
சிந்தாகுலங்களறும் பஞ்சவடிகிராமதில் மகிழ்வாக

Digitized by Roja Muthiah Research Library

2. தீராதிதீரனென தேவர்களைப்போலவர்கள்
மாருதகாமமுயர் லெட்சுமணராமனென
தீயாதகாந்திஒளி வீசபிரகாசமுடன் கண்டேன் நான்

3. மாங்காதமாலையணி மாயனருள்நான்முகனும்
கொந்தாரமோகக்கிளி யாரமொடு தோள்புரளும்
மாயாவிலாசமட மங்கையரையெந்தவிதம் புவிமேலே

4. உண்டாக்கினாளோ அறியேனவளைநீயுமினி
கண்டாலுமுன்றன்கலி தீருமிதுவுண்மையென
உத்தாரமேதுமொழியாம லினிநீயவளை தொடர்வாயே

மாரீசன் ராவணனை யிடித்தல்

பாதிராத்திரி வேளையில் என்ற வர்னமெட்டு.

1. என்னயோசனை பண்ணினாயடா
ஏற்கும்மா இந்த புத்தி நின்று
கார்க்குமோ தெய்வம் நத்தி யும்பர்
யாவருமுன்னைப் பற்றி
புவியெங்குமே பழியோங்கவே
மொழிவாரடா அப கீர்த்தி

2. மண்ணுளோர் துதிராமனாகிய
மன்னனார் தேவியாலே வெகு
பின்னமாகு மென்மேலே ஆசை
யெண்ணிடாதே மன்மேலே கெடும்
மாயமோக விலாசமேயிதை
மறந்திடில் நல்ல வேலை

3. முந்தி யிந்திரன் அகலிகைமீது
மோகமாகியே தொட்டான் மனம்
நோகவே பழி பட்டான் சந்திரன்
வேகவே கலை கெட்டான் அந்த
முறைமையாவையு மறியுநீயொரு
மூடன்போலுரைத் திட்டாய்

4. அந்தநாள் கரதூஷணர்சென்று
அழிந்தனரங்கு கோனே தங்கைக்
கருந்தது மூக்குந்தானே அதை

Digitized by Roja Muthiah Research Library

அறிந்திடா திண்ணமேனே வுன்றல்
அன்றுயானேகில் தங்குவதேது
அழிவதேவுண்மை நானே

பொய்வேடங்கொண்டுவந்த மாரீசனென்னுமானை பிடித்துத்தாவென்று சீதைராமரிடம் சொல்வது.

ஆறுமுக வடிவேலவனே யென்ற வர்ணமெட்டு.

சீதைசெல்வது

1. போகுது பாரொரு மானதிவேகமதாகவே ப்ராணபதி
அதை-பூவைமகிழ்ந்திட தாவிபிடித்தருள் பூபதியித்ததியே

ஸ்ரீராமர் சொல்வது

2. பாகுமொழிபுகல் கோதையிளங்கொடி பங்கமிலாக் குயிலே
வெகு-பக்ஷமுடனுனக் கித்ததிதந்திடுவே னடியென் மயிலே

லக்ஷ்மணன்சொல்வது

3. மானென்றுயெண்ணி மயங்கிடவேண்டா மதனிஜானகியாலே
நிஜ-மானல்லமாய மாயனுகவந்தபாவி மாரீசனிக்காலே

ஜானகி.

4. ஏனேபிடித்திட தாமதமின்னமும் யேகிடுவீர்நாதா
இங்கு-இளையவர்வார்த்தையைக் கேட்டிடிலென்மன
மேங்கிடுமே- நீதா

ஸ்ரீராமர்.

5. சூழும்புவிதனிலெங்குசென்றாலும் சுருக்கிலதைப்பிடிப்பேன்
என்றன்-கோதையமனம் வாடிடவேண்டாந் துயரமதை
தவிர்ப்பேன்

லக்ஷ்மணன்.

6. ஏழைசொல்லம்பலமேறுமோ கட்டளையின்படிசெய்வேனே
இனி-யென்னலாவதென்ன சொன்னேனிதின்பயன்யெவ்வித
மோதோனேன்

Digitized by Roja Muthiah Research Library

கிஷ்கிந்தா காண்டம்.

அனுமார் மறைவாகநின்று ராமலக்ஷ்மணரைப் பார்த்து ஆலோசிப்பது.

சென்னிகுளநகர்வாசன் என்ற வர்னமெட்டு.

1 ஆரிவரோ அறியேனே வந்த
அற்புதமுங் குறியேனே இவர்
ஆவிற்குண வாகும்பயிர் தேயும்படி யாகக்கடவா
தோர் நடவாதோர்

2 தீரக்கரைக் கொன்று ஜெயம்
பூரணவந்தாரோதான் வென்று இவர்
தேவர்க்கொரு ஆவற்பரி தாபக்குறை யேகப்புவி
மேலே வந்தமாலே

3 கங்கை யுதித்ததுபோலே வரக்
கண்ணினுல் கண்டேனேசால இவர்
நாளை ப்பரு வத்திற்கொரு வேளைக்குள் வேடங்கொளுங்
காத்தர் பரிசுத்தர்

4 துங்கமிகுந்த சஞ்சீவி போன்ற
தோகைமயில் சீதாதேவி சென்ற
துயரால்மன மிகவாடியே வந்தார்விரை வாய்தேடியே
துயர்மிகு பாராய்

சுக்ரீபன் வராததைப்பற்றி ஸ்ரீராமர் கோபித்தல்.

பாதிராத்திரி வேளையில் என்ற வர்னமெட்டு.

1 என்னமாயமோ சொன்னசுக்ரீபன்
இன்னமும் வரக்காணேன் கெட்ட
எண்ணமோ ஒன்றுந்தோணேன் தம்பி
எவ்விதமறியேனே அன்ன
ஏற்றமென்னமோ கேட்டுவந்தெனக்
கியம்புவாய் நொடிதானே

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU - INDIA

Digitized by Roja Muthiah Research Library

2 அண்ணன் வாலியைக்கொன்ற அம்புபோல்
ஆயிரங்களையுண்டு அதை
அறியாமல் மதங்கொண்டு வீணாய்
அழியாதே மூடாவென்று வெகு
ஆக்கிரமத்துடன் தாங்கிட்டபுகன்
றறிந்துவா பதிவின்று

சுந்தர காண்டம்.

சீதை தன் துயரத்தை திருச்சடையிடம் முறையிடல்.

திருப்புகழ் மலடிவயற்று மகன்போலே என்ற வர்னமெட்டு.

சீதை சொல்வது.

1 மங்கை திருச்சடையே நானேதுயர்
பொங்குதே யென்செய் திடுவேனே-என்
மன்னவனைப்பிரிந் தினந்தானே பூவிலிருந்தேனே

திரிச்சடை சொல்வது.

2 நங்கை ஜானகியேவாடாதே ஒரு
பங்கமும்வந்தணுகிடாதே-கெட்ட
ராட்சதர் கொட்டமும் நீடாதே துயர்டாதே

சீதை சொல்வது.

3 பாவியிருப்பிட மறிவாரோ அவன்
ஆவியிராதெனக் கூறிவாரோ-அவள்
பார்த்திடலாமென வருவாரோ மனதெவ்வாறோ

திரிச்சடை சொல்வது.

4 தேவி புன் சஞ்சலமாற்றிடவே படு
பாவியைக்கொன்றுக் கூறிடவே-வுனை
தேடியகாதனும் வந்திடுவார்நீயும் தேரிடவே

இராவணன் சீதையைக் கெஞ்சல்.

கருவினுருவாகிவந்து என்ற வர்னமெட்டு.

1 பாவையே யுனையேநினைந்து சூழுமையலால் மெலிந்து
பாவியிலேவு நலிந்து துயராகி

Digitized by Roja Muthiah Research Library

பாசம்திலேமிருந்து ஆசைவெகுவாய் வளர்ந்தன்
பாகுமொழிமே லுகந்து வரலானேன்

2 தேவியெனை யாதரித்து ஆவலதையே தவிர்த்து
தேறுதல் மனக்களிப்பு தருவாயே
தேஜசுநிறைந்தரத்ன மாசருவிலாஸசித்ர
சேலணசுகன்ற கண்கொள் மடமானே

3 காவிமலர் பூக்கள்மீது தாவிவளர் வண்டினங்கள்
காரிருளையொத்த கூந்தல் முடிமீது
காதலொடு ஒன்றுகூடி ராகமதை நின்றுபாடி
காமரஸ மென்றழைக்கும் வகையாலே

4 பாவிமதராஜனம்பு மேவியெனையண்டிவம்பு
பண்ணுமொரு யிம்சைதனை பாராயோ
பட்சமுடனென்னை யிச்சையுடனே யணைந்து
பற்பல சுகங்களின்பம் பெருவாயே

சீதை ராவணனை இடித்தல்.

திருப்புகழ் மலடிவயற்று என்ற வர்ணமெட்டு.

1 ராட்சஸப்பதரே யேற்காதே அர
சாட்சியானதை தோற்காதே ரெகு
ராமன் தேவியைப் பார்க்காதே வாழ்வுபோக்காதே

2 ராவணனேகெட்ட படுபாவி என்மேல்
ஆவல்கொண்டாயே நாறொருநாவி குலம்
நாசமுறும் ஏன்விருதாவிற் கெட்டலையாதே

3. ஆகூஷியாய்க்கெர்வங் கொள்ளாதே வெகு
மாகூஷியாய்ப்பதில் விள்ளாதே உன்
ஆள்கையுமினி யில்லாதே பாவம்பொல்லாதே

4. தீயுரைசொன்னநாக் கெரியாதோபத்து
வாயிலும்புழுவாய்ச் சொரியாதோ அடா
தீனனே உன்தலைமுறியாதோ குடல்சரியாதோ

யுத்த காண்டம்.

ஸ்ரீராமர் யுத்தம் மகோதரன் சம்ஹாரம்.

வெள்ளிமலையொத்த பலமேடை என்ற என்றமெட்டு.

1 பாவிமகோதரனேவாடா விடும்
பாணத்துக்கு ஓர்மொழிசொல்மூடா நீயும்
பங்கப்படவே ராவணன்ன் பங்கிலேயிருந்துகுடி
கெடுத்தாய் இங்கு அடுத்தாய்

இந்திரஜித்து வதம்.

2 தேவர்களையே வதைக்கும் பித்தே கொண்ட
தீரனுய்ப்பிறந்த இந்திரஜித்தே வுன்றன்
தேரையுமுறித்துகெட்ட பேரையுமழிக்ககணை
கானே விடுத்தேனே

ராவண சம்ஹாரம்.

3 ராமபாணத்தைக் கரத்திலெடுத்தார் துஷ்ட
ராவணனைக்கெ ல்லவென்றுவிடுத்தார் கண்டு
நன்னயஞ்சேர் அந்தரத்தில் உன்னித தேவர்களாலே
நிரைத்தார் அருள்நிரைத்தார்

விபீஷணன் ஸ்ரீராமரைப்பணிவதும், லங்கையை முடி சூட்டிக்கொள்வது.

சந்தவரை வந்தருக என்ற வர்னமெட்டு

1 தொண்டர்பணி புண்டரீகத்துயா துஷ்டர்க்
சண்டனம்புரிய வந்தமாயா எழில்
சுந்தரிஜானகி மகிழ்நேயா
கனிவாயா மிருபாயா என்றன்
தொல்வினை யகற்றிடுஞ் சகாயா

2 தெண்டனிட்டேன் முண்டனுடன்கானே ஒரு
ஜென்மமெடுத்த பாவிதானே வுன்
அண்டையிலிருக்கும் விதங்கோனே
பெருமானே சீமானே வெகு
அன்புடனருள்புரி பூமானே

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீராமர் லங்கையை விபீஷணருக்கு முடிசூட்டல்.

3 சந்திரசூரிய ருள்ளகாலம் — வரை
தந்தேனு னக்கிலங்கைசீலம் — இனி
சந்தோஷமுடனே யெந்தநாளும்
அதையாளும் புகழ்நீளும்
தக்கசிரஞ்சீவியாய் மென்மேலும்

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

பூமிமேச்சிடும் என்ற வர்னமெட்டு.

1. தாட்சியன்றி அரசாட்சிசெய்ய ராமச்சந்திரன்
அதிசந்திரன் வெகுதந்திரன் — அவர்
தம்பிமார்களோடு வும்பருபுகழ
சாமரஞ்செய்தா னிந்திரன்

2. காட்சிசேர்அயோத்தி மாட்சியாய்ப் பெருமைகாட்டினர்
முடிசூட்டினர் பறைதீட்டினர் — வெகு
காதலோரம்பை மாதர்கள் நடனங்
கூட்டினர் அதிபூட்டினர்

3. தேசதேசமன்ன ராஜராஜன் தன்ன தேறினர்
மணமாறினர் பதங்கோரினர் — ராம
தேசிகர்க்குறிய ஆசிகள்பலவுங்
கூறினர்பத மேறினர்

4. மாசிலாஅந்த தேஜசுநிறைந்த மங்கையாள்
மலர்ச்செங்கையாள் சீதைநங்கையாள் — உடன்
மங்கலந்துலங்க தங்கமான செங்கோல்
வாங்கினர் கையிற்றாங்கினர்

ஸ்ரீராமர் கீர்த்தனம்,

தமாரேத்த ரகுவானு என்ற வர்னமெட்டு.

பல்லவி.

ரெகுராமா தயாரனேன் — ஆதிமூலனே ரெகு

Digitized by Roja Muthiah Research Library

அநுபல்லவி.

1 ஆதிமூலனே சீலனே ஆதவகுலபாலனே
மாதுஜானகி லோலனே மாரவேள்பிதாவே தஞ்சங்
காருங்காருமே ரெகு

2 சாகரத்திடத்தகம்ஸ பாவியைக் கொன்றனே பார்
முழுதுண்டவா ரெகு

3 ஈரட்சரந்தனிலே சீராய்பதிந்தவனே
நேராய்ப்பணியுமன்பர் நெஞ்சினி லிருப்பவர் நிற்குண
மாயனே ரெகு

4 பாற்கடல்மேற் றுயின்றாய் பாவைமகிழ் நின்றாய்
காக்கக் கருடனேறி கண்டுவருவாய் கிருஷ்ணசாமி
தாசனே ரெகு

ஸ்ரீராமர் கீர்த்தனம்.

வெள்ளியலையோத்த என்ற வர்னமெட்டு.

1 ஆதிமூலமென் றலறிந்தானே நின்ற
ஆனையைக்கார்த்திட்ட குணவானே வல
காசைதனையே நெகிழ்ந்தன் பாசமதிலேபுகுந்து
நானே துதித்தேனே

2 வேதனையளித்த பிரகாசா திரு
விற்புருவகக்கையின் வுல்லாசா உயர்
வேந்தனெனவேசிறந்த சாந்தகுணமாஞ்சுக
விலாஸ ஜெகதீசா

3 ராகவனே ராகவனேயென்று அருள்
நாடியே திருப்பதியேசென்று வுனை
நம்பினவர் துன்பமதை யின்பமுடனே தவிர்க்குங்
கோனே பெருமானே

4 தேசமேபுகழும் ஜெயங்கொண்டம் கிருஷ்ணன்
செப்பியபதத்தினல் வைகுண்டம் அருள்
சேருமென கூறுமொழி பாரிலுரை நீதிவழுவாதே
தோரி யப்போதே

ஸ்ரீராமர் கீர்த்தனம்

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்னமெட்டு.

1 வேதமுடிமீதுறைவோனே விண்ணவரேற்ற மண்ணு
ளோர்போற்ற வேலைமீதிலேதுயில்வோனே உனை
வேண்டினேனெனை ஆண்டருள்பஞ்ச பாண்டவர்க்கருள்
பூண்டதற்பரி வித்தகாநின் பொற்பதம்யானே
தினம்பணிந்தேன் மனந்துணிந்தேன்
வேதனையளித்த பெம்மானே

2 காதலிற்ஜானகிநேயா சிற்றன்னைவாக்கே அற்புதமாக்கி
கானனம்நடந்த ஓதுராயா அன்று
கடியமொழிபுகல் கொடியதாடகை மடிய
ஒருகணை கொடியிலெய்து
அக்காதகியைக் கொன்ற செவ்வாயா
இன்னமும்வாது யேனோ யென்மீது
கற்பகவியாமள நேயா

3 நித்தமுஞ் சங்கீதக்கூட்டமே தொண்டர்கள்கூடி கொண்
டாடிப்பாடி நெஞ்சத்தின் கவலையோட்டமே துங்க
நிருபர்புகழ்குண செந்தின்மாநகர்
முருகன்மேரொலாயில்சிந்துபாடிய நேசனுபண்ணு பலைதாசன்
வையகந்தன்னில் செந்தமிழைப்போலவே
நேர்மையாய்செய்தான் கிருஷ்ணதாசன்

4 சித்திரவிமானமீதேறி பக்தர்விலாசன் சித்தர்வுல்லாசன்
தேடிடுந் தாசர்களைக்கோரி வுயர்
சேவைதரமகம் பரவிடபக்தர் மேவிபஜனைகள் கூவிட அங்கு
சேயன்கிருஷ்ண சாமிகூடவே
செந்தமிழாலே வைகுந்தன்மேலே
செஞ்சொலின் கீர்த்தனம் பாடவே

ஸ்ரீவெங்கடாஜலபதி கீர்த்தனம்.

அள்ளிஅள்ளிநீர்குடிக்கும் என்ற வர்ன மெட்டு.

1 கங்குலகற்றுந்திரு வேங்கடராமனை
கண்டுதெரிசிப்புவர் புவமருப்புவர் கண்டுதெரிசிப்புவர்

Digitized by Roja Muthiah Research Library

கலையனைத்தும் கொடியில்தொலைத்து
கதிரையளிக்கும் புவியிற்ஜொலிக்கும் கங்கு

2 அங்குமிங்கும்புவியில் எங்கும்நிறைந்தவன்
அன்பர்க்கருள்புரிந்தவன் வனமிருந்தவன்
அன்பர்க்கருள் புரிந்தவன்
அந்தமிகுந்த சோலையுடைந்த ஏழுமலையில் வாமுகுந்தன் கங்கு

3 செங்கைக்கினியகலச் சங்குமுங்கொண்டவன்
தேவர்புகழு மாண்டவன் ஆரம்பூண்டவன்
தேவர்புகழுமாண்டவன் தீராதிதீரன் ஸ்ரீரகுவீரன்
பாரையளந்தோன் சீரில்மிகுந்தோன் கங்கு

4 பங்கமிலாகர சிங்கமாய்வந்தவன்
பாலைமகிழநின்றவன் கனிதின்றவன் பாலைமகிழ நின்றவன்
பாலகன்கிருஷ்ண சாமியையாளும்
சீலமிகுந்த ஆதிமூலனே கங்கு

மங்களம்.

எந்தனை தோந்தரை என்றவர்னமேட்டு

கண்ணிகள்.

1 மங்களமாஞ்செய மங்களமாஞ்சுப மங்களமாம் நித்தியமங்களம்
மாருதகாமும் ஸ்ரீராமனுக்கு மங்களமாஞ்செய மங்களம்

2 கங்கையர்சீதா தேவியர்க்குமுயர் நலமுள்ளதம்பி மூவருக்கும்
கன்னயஞ்சேர்குரு வசிஷ்டமகாமுனி காதனுக்கும்சுப மங்களம்

3 கஞ்சலைகைகேசி சுமித்திரையோடு காரிகைதாய்மார் யாவர்க்கும்
கண்ணியமாக மண்ணினில்வாழி கண்டிடவே சுபமங்களம்

4 அஞ்சமும்ராஜ அம்ஸமோராம அம்ஸமெனு மிச்சரிதையினை
அன்புடன்படிப்போர் அறிவுடன்கேட்போர் அனைவருக்கும் சுப
மங்களம். மங்களம்,

திருப்புகழ் இராமாயணக் காவடிச்சிந்து

முற்றிற்று.

Digitized by Roja Muthiah Research Library

கும்பகோணம்-இராமச்சந்திரன் இயற்றிய

சாப்பிக்கும் பழயதுக்கும் சண்டை தேத்தண்ணீர் மத்தியஸ்தம்	0	1	0
பாலியப்பெண்கள் தலையணை மந்திரம் இரண்டுபாகம் அடங்கியது	0	1	0
பூஜா ராமாயணம்	0	1	0
சூர்ப்பனகா பங்கம் டிராமா	0	4	0
கிருஷ்ணலீலா டிராமா	0	5	0
பாஸ்கரதாஸ்சிடன் வெள்ளைசாமி தாஸரியற்றிய பக்திரசகீர்த்தனை 1-ம் பாகம்	0	5	0
,, ,, ,, ,, 2-ம் பாகம்	0	5	0

சுவாமிமலை S. பொன்னம்பலம்பிள்ளை இயற்றிய

திரு ஏரகமென்னும் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி காவடிச்சிந்து	0	2	
இராமாயணம் சுந்தரகாண்டம் மாருதி விஜயமென்னும்			0
இலங்காதகனம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0

சுவாமிமலை, கு. கு. முத்தையாபிள்ளை இயற்றிய

பொய்சொல்லா புனிதனெனும் சத்யஅரிச்சந்திர திருப்பு-கா-சிந்து	0	3	0

மதுரைவித்வான் கலியாணசுந்தரம்பிள்ளை இயற்றிய

மன்மதராஜன்சரித்திர லாவணி எரிந்தகக்ஷி 1-க்கு	0	3	0
பஞ்சரத்தின திருப்புகழ் மூலமும் உரை	0	3	0
எமனை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமாரன் சரித்திரம் என்னும் சித்திராபுத்திரன் கதை	0	6	0
ஸ்ரீமத் பரந்தாமன்பேரில் இந்துஸ்தான் வர்ணமெட்டு பஜனை ஜாவளிகள் முதல்பாகம் 1-க்கு	0	2	0
தாடகை சம்மாரம் டிராமா — 1-ம் பாகம்	0	2	0
சீதா கலியாணம் பரசுராமபங்கம் டிராமா 2-ம் பாகம்	0	2	0
வழிநடை உப்புமாவு பாட்டு	0	1	0
சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் ஏசல்	0	2	0
சம்பந்திக்கு சமையல்செய்யும் அப்பளப்பாட்டு	0	1	0
பல ஸ்தலங்கள்பேரில் பாடிய சிவப்புகழ்	0	6	0
குசேலமாமுனி சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
ஞானசவுந்தரி திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
சரசாங்கி ஜாவளி முதற்பாகம்	0	2	0
சூடிகொடுத்த நாச்சியார் என்னும் கோதைகல்யாணம், ஆண்டாள் பரிணயக் கும்மி	0	3	0
சிறுத்தொண்ட நாயனார் திவ்யசரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு அடங்கியது	0	2	0
பாரிஜாதநாடக கும்மியும், ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் திருட்டுப் போன கும்மியும்	0	2	0
ஆர். நடராஜ ஆசாரி. கே. கே. தங்கவேலுபிள்ளை இவர்கள் பாடி வரும் சுதேச கன்னன்பாட்டு	0	2	0
நாடகங்களில் விகடம் சில்லரைவேஷங்களில் சிலது எல்லாரும் சொல்லும் நல்ல சில்லரை பாட்டுகளும் விதூஷக ஆக்டும் உண்டு	9	4	0
சித்தர்கள் மருத்துவ வினுவிடைகும்மி	0	1	0
இந்துஸ்தான் பதங்களும் அடங்கிய ஸ்ரீமகாவிஷ்ணு பஜனைகீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0

Page numbering incorrect

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீரங்கா பாகவதத்தில் துலாபார நாடக கும்மியும்			
ஸ்ரீரங்க நாச்சியார் வசந்த உற்சவ கும்மியும்	0	2	0
சக்குபாய் சரித்திரம் டிராமா	0	8	0
குசேல சரித்திரம் டிராமா	0	8	0
பாகவத திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
பரங்கிப்பேட்டை—டி. ஆர். சம்பந்தா என்பவரால் இயற்றிய			
பார்வதி சதாரம் திருப்புகழ காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
மகா மாக்ஷிமை தங்கிய கீர்த்தி சிங்கமென்னும் கண்டிராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	4	0
சக்குபாய் சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
ஸ்ரீ கண்ணன் யமுனையில் புன்னமரத்தில் நடத்திய கோபிகா வஸ்திராபரணம் கொம்மி	0	3	0
அதிபராக்கிரம சாலியாகிய மதுரைவீரன் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 3 0 திரியோதனன்மோகம் நாவல்ஸ்	0	4	0
நளச்சக்கிரவர்த்தி திருப்புகழ் காவடிச்சிந்து (முதல் பாகம்)	0	2	0
ஷை இரண்டாம் பாகம்	0	2	0
அதிரூப அமராவதி திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
திருத்தணிகை சுப்பிரமணியர் கீர்த்தனை திருப்புகழ் வர்ணமெட்டு	0	2	0
புதிய கலியாண வாழ்த்து லசல் ஓடம் லாலி ஊஞ்சல் அடங்கியது	0	2	0
செட்டி சேலைக்கும் நாட்டு சேலைக்கும் சண்டை	0	1	0
நாகூர் ஆண்டவர் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
விநாயகர் கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
சுப்பிரமணியர் கொத்து என்னும் அட்சரமாலையும், சத்குரு சங்காரமாலையும், சத்குருசங்கார திருப்புகழும், விநாயகர், சுப்பிரமணியர், சிவம், சிவகாமசுந்தரி, விஷ்ணு இம்மூர்த்திகளி னர்ச்சனைக்குரிய அஷ்டோத்திரமும், முருகேசர் பதிகமும் அடங்கியிருக்கிறது.	0	8	0
கற்புக்கரசி என்னும் வெகு விநோத விரதபூஷணி விநோத டிராமா	0	5	0
வள்ளி சுயம்வரம் யென்னும் டிராமா சரித்திரம்	0	3	0
அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து	0	2	0
நீலிக் கதை 0 4 0 பவளக்கொடிசரித்திரம் டிராமா	0	3	0
பண்டரி கீர்த்தனை 0 4 0 ஆருபாவை ஒக்கபிலேரி	0	4	0
உலிக்குத் தாலிகட்டின கதை	0	4	0
ஏகாதசி மகாத்மியம் என்கிற உருக்மாங்கத சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	4	0
மாசிலாமணி உபாத்தியாயரியற்றிய சிறுத்தொண்டநாடகம்	0	8	0
சீகாளத்திபுராணம்—வசனம், காளத்தி க்ஷேத்திரத்தில் பக்தி முக்தியடைந்தவரின் சரித்திரங்களின் ஐதீக படங்களுடன் உண்டு	0	6	0
திருவேரகம் சாமிநாதசுவாமி காவடி நொண்டிச்சிந்தும், மாரியம்மன் காவடி நொண்டிச்சிந்தும் உள்ளது	0	1	0
வல்லாள மகாராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
மாம்பழக்கும்மி	0	1	0
[illegible] சரித்திர டிராமா	0	5	0
ஸ்ரீசௌளராஜப் பெருமான்பேரில் பக்திரஸ அருள்வாக்கு பதங்கள்	0	4	0
ஸ்ரீகண்ணபிரான் பஜனைகீர்த்தனை	0	2	0

இன்னும் தங்களுக்கு தேவையாய் இருக்கும் புஸ்தகங்களை விபரமாய் எழுதினால் உடனே அனுப்பப்படும்.

Page numbering incorrect

Digitized by Roja Muthiah Research Library

புதிதாய் அச்சிடும் நூதன புத்தகங்கள்.

நல்லதங்காள் சரித்திரம் (நாடகத்திற் குரியது)	0	3	0
கோவிலன் சரித்திரம் முதல்பாகம்	0	3	0
ஷை இரண்டாம்பாகம்	0	3	0
அல்லி அர்ஜுனு சரித்திரம்	0	3	0
புதியபார்ஸீ சதாரம்சரித்திரம்	0	3	0
சுலோசனுசரித்திரம் (ராமாயணத்தில் இந்த்ராஜித்துவதம்)	0	2	0
* பார்ஸீ நூதன சிராளன்சரித்திரம் 1-ம்பாகம் 0-3-0 2-ம்பாக	0	3	0
தேவரகசியமென்னும் தாராசசாங்கவிஜயம்	0	3	0
புஷ்பலீலாவதி என்னும் குலேபகாவலிசரித்திரம்	0	3	0
பார்ஸீ லவிதாங்கிசரித்திரம்	0	3	0
* பாதுகா பட்டாபிஷேகசரித்திரம்	0	4	0
* சீதாபஹாரணம் சரித்திரம்	0	5	0
* வைகுந்தவாசன், கைலாநாதர், முருகக்கடவுள் பஜனைகீர்த்தனை, இதில்இந்துஸ்தான், பார்ஸீ, தில்லானு, டோப்ரி, திருப்புகழ், காவடிச்சிந்து, தேவாரம் முதலான வர்ணமெட்டுகளால் இயற்றியது	0	6	0
கபீர்தாசர்சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	4	0
மஹா பக்தவிஜயத்தில் ஓர்பாகம் மதிவல்லபமங்கை மோஹனுள் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
ஜயதேவர்சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு மஹா பக்தவிஜயத்தில் ஓர்பாகம்	0	2	0
* கீசகசம்ஹாரம் டிராமா (விராடபர்வக்கதை)	0	4	0
* திருப்பதிபிரபாவம், திருப்புகழ்காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	4	0
* ஹரிஹரா பக்திரஸகீர்த்தனை, ராமாயண கொண்டிச்சிந்து	0	6	0
கருவூரார் அஷ்டமாசித்து மாந்திரீகம்	0	4	0
தலைவாங்கி அபூர்வசிந்தாமணிநாவல் (அருமையானகதை)	1	0	0
வெங்கடேசப்பெருமாள்தியானம் ஆண்டிபண்டாரம்மெட்டு	0	1	0
ஸ்ரீமகாவிஷ்ணு தசாவதாரக்கீர்த்தனைகள், திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
அகல்யா சாபவிமோசனம் திருப்புகழ் காவடிச்சிந்துவர்ணமெ	0	4	0
சாதகசிந்தாமணி (திக்குகடிதம்)	1	8	0
ஷை காலிகோபயிண்டு (திக்குகடிதம்)	2	0	0
சோதிட கிரகசிந்தாமணிஎன்னும் பெரியவருஷாதிநூல் (திக்குகடிதம்)	1	0	0
ஷை காலிகோபயிண்டு (கிளேஸ்கடிதம்)	1	4	0
திருப்பதி வேங்கடேசுவரர் தேர்வண்டிக்கால் சரித்திரக்கீர்த்தனை	0	8	0

Digitized by Roja Muthiah Research Library

ஸ்ரீ வேணுகோபால நாமசங்கீர்த்தனம்	0	6	0
அம்பரீஷ சரித்திரக்கீர்த்தனை,	0	2	0
சீதாகல்யாண சரித்திரக்கீர்த்தனை	0	2	0
துருவ சரித்திரக்கீர்த்தனை	0	3	0
சுபத்திரைக் கலியாணகீர்த்தனை	0	2	0
உருக்குமாங்கத சரித்திரக்கீர்த்தனை	0	2	0
சிறுத்தொண்டநாயனர் சரித்திரக்கீர்த்தனையும், சீலவதி சரித்திரக்கீர்த்தனையும்	0	2	0
ராஸக்ரீடை	0	2	0

வெகு விநோதமாய்விளங்கும் பார்ஸி இந்துஸ்தானி வர்னமெட்டுகளும் அருமையான ராகதாளங்களும் அமைந்து சகல நாடகக் கம்பெனிகளிலும் ஆடி வருகின்ற சாரங்கதரன் நாடகசரித்திரம் இதன்விலை அணா 6

உ

சிவமயம்.

விளம்பரம்.

வித்தியாப் பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அனேகவித சரித்திரங்கள், திருப்புகழ், காவடிச்சிந்து வர்னமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசதாருக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவாகள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத்தகுந்த போஷ்டு பிள்ளைகள் வாங்கி கவரில்வைத்து அனுப்பினல் உடனே நீர்கோரிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பிள்ளைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினல் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜ் 1-புத்தகத்திற்கு 5-அணா வாகும். அதனல் மேற்சொன்னபடி தபால பிள்ளைகள் அனுப்பினல நாங்கள் நட்பெட் போஷ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா குடுத்து வாங்கிக்கொள்ளவும். அப்படி அனுப்பினல் புத்தகம் உங்களுக்கு பத்திரமாகசேரும். உங்களுடைய அட்ரஸ் விபரமாய் எழுதவும்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்,
4-வது நெய்பார் 2-வது சந்து,
பெருமாள்கோவில் தோட்டம்,
மதராஸ்.

Digitized by Roja Muthiah Research Library